IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Code of Criminal Procedure)
CC NO. 09/2013

Date : 13.05.2026 PW5 (LW10)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முஜீபுர் ரஹ்மான் | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | ஆதம் | தொழில் | தலைமை காவலர் |
| கிராமம் | திருநாவலூர் | வயது | 38 |
| எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் திருநாவலூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். உதவி ஆய்வாளர் திரு.ஞானசேகரன் என்பவரை எனக்கு நன்கு தெரியும். அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சையம். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 07.11.2012 அன்று மாலை 15.00 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு.ஞானசேகரன் நிலைய பொறுப்பில் இருந்தபோது முண்டியம்பாக்கம் அரசு மருத்தவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று அப்போது நிலையத்தில் இருந்த முதல் நிலை காவலர் 908 என்பவரை அங்கு சென்று புகார் வாக்குமூலம் பெற்று வருமாறு கூறியதன் பேரில் முதல் நிலை காவலர் 908 அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வண்டிப்பாளையம் கிராமத்தை சேர்ந்த ஜெயசந்திரன், த/பெ. சிங்காரவேல் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று வந்து உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார். உதவி ஆய்வாளர் அதனை பரிசீலனை செய்த நிலைய குற்ற எண்.593/2012 ல் 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிராக **இதச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)-ன் கீழ்** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அ.சா.1 ஜெயச்சந்திரன் கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆகும்.** பின்னர் அன்றைய தினமே மாலை 04.00 மணியளவில் சம்பவஇடம் சென்று சாட்சிகள் சுப்ரமணி, ராஜவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆகும். பின்னர் சம்பவ சாட்சிகளான ஜெயசந்திரன், கிருஷ்ணமூர்த்தி, சங்கர், பரமசிவம் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்த சம்பவம் உண்மை என தெரியவந்ததால் அன்றை தினமே 16.30 மணியளவில் வா.பெரியகுப்பம் பஸ் நிறுத்தம் அருகில் நின்றிருந்த எதிரி ஏழுமலையை கைது செய்த நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட **ஜெயச்சந்திரன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்கு** சிகிச்சை

அளித்த **மருத்துவர் சங்கர் என்பவரை** விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து **ஜெயச்சந்திரன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்குஏற்பட்ட காயம் சொற்ப காயங்கள்** என காயச்சான்றிதழ்கள் பெற்றுள்ளார். **ஜெயச்சந்திரனின் காயச் சான்றிதழ் அ.சா.ஆ.6** ஆகும். **கிருஷ்ணமூர்த்தியின் காயச் சான்றிதழ் அ.சா.ஆ.7** ஆகும். இவ்வழக்கில் புகார் வாக்குமூலம் பெற்று வந்த காவலர் 908 முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி-1 எதிராக **இதச பிரிவுகள் 294(b), 323**-ன் கீழும் 2, 3 எதிரிகளுக்கு எதிராக **இதச பிரிவுகள் 294(b), 324** -ன் கீழும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி இல்லை. ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரை பெற்று இவ்வழக்கின் ஆவணங்களை காவல் நிலையத்திலேயே தயார் செய்து சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் சம்பவ இடம் செல்லாமலும் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது விசாரணை அதிகாரி தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.